உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. குறள் 1032

# காலிங்கராயன்
# தின விழா



**நாள் : தை மாதம் 5-ம் தேதி**
**(19.01.2019) சனிக்கிழமை**
**காலை 6.00 மணி**
**காளிகாட்டுகளம், பஞ்சலிங்கபுரம்.**

அன்புடையீர்,

வரும் தை மாதம் 5-ம் தேதி (19.01.2019) சனிக்கிழமை, நமது முன்னோர் தெய்வத்திருவாளர் **"லிங்கையன் (எ) காலிங்கராயன்"** அவர்கள் சுமார் 750 ஆண்டுகளுக்கு முன்பு நமது பகுதிக்கு (பவானி முதல் கொடுமுடி வரை) வாழ்வாதாரம் கிடைக்கும் பொருட்டு வாய்க்கால் அமைத்து தண்ணீர் திறந்த நினைவு நன்னாள்.

அன்று காலை 6.00 மணியளவில் "அண்ணாரை" நினைவு கூர்ந்து நன்றி செலுத்தும் பொருட்டு, பஞ்சலிங்கபுரம், காளிகாட்டுகளம் அருகில், பொங்கல் வைத்து வழிபாடு செய்யவும், வாய்க்காலில் முளைப்பாரி விட்டு நன்றி செலுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் அண்ணாரின் பொள்ளாச்சி மற்றும் கோவையில் உள்ள குடும்பத்தார்கள் இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பு சேர்க்க உள்ளார்கள்.

விழாவில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, நமக்கெல்லாம் வாழ்வு தந்து கொண்டிருக்கும் காலிங்கராயன் வாய்க்காலையும், அதை அமைத்துக் கொடுத்த நமது தெய்வம் **லிங்கையன்** என்கிற **காலிங்கராயனையும்** வணங்குவோம்.

முளைப்பாரி போடுதல்:
**மார்கழி 21, (5.1.2019) சனிக்கிழமை - காலை 7.30 to 8.30 மணி**

இங்ஙனம்,

**பஞ்சலிங்கம் உழவர் மன்றம்,** (பதிவு எண் 9024297)
**பஞ்சலிங்கம் தோட்டக்கலை மஞ்சள் சாகுபடியாளர் குழு,**
மற்றும் **ஊர்பொதுமக்கள், பஞ்சலிங்கபுரம், மொடக்குறிச்சி.**

தொடர்புக்கு : **99424 15427, 73738 56610**



# வாய்க்கால் வழியாக வரலாறு படைத்த காலிங்கராயன்

வயலென்றும் மேடென்றும் இனம் பிரித்து
வக்கனையாய் பெண் கொடுக்க மறுத்தினால்
முறைமாமன் செயல்தன்னைதான் எதிர்த்து
முடிவு செய்தான் இளம்வேங்கை லிங்கையன்

ஊராட்சிக் கோட்டை கல்லை உடைத்தெடுத்து
ஊரெல்லாம் நீர்பாய வாய்க்கால் தந்தான்
வளைந்தோடும் வாய்க்காலை வெட்டி வைத்து
வாழை கரும்பு மஞ்சள் சோலை செய்தான்.

எண்ணூறு ஆண்டுகட்கு முன்னமேயே – நதி
இணைப்புத் திட்டம் கொண்டுவந்த மன்னவனை
தெய்வமெனப் போற்றிடுவோம் வாரீர்! வாரீர்!
தீந்தமிழால் கவிதை செய்தோம் கேளீர் கேளீர் !

– திரு. தாமரைக் தூரன்

## "காலிங்கராயன் விருது"
## பெ. ராமசாமி - சானார்பாளையம்
## இயற்கை விவசாயி - 2019

### காலிங்கராயன் அணைக்கட்டு – பவானி

| | | |
|---|---|---|
| பிரதான அணைக்கட்டு நீளம் | - | 757 அடி |
| மைய அணைக்காட்டு நீளம் | - | 854 அடி |
| முரியன் அணைக்கட்டு நீளம் | - | 1350 அடி |
| தலைப்பு மதகு - கண்ணறைகள் | - | 6 எண்கள் |
| தலைப்பு மதகு - அடிமட்டம் | - | (+) 532.66 அடி (MSL) |
| மணல் போக்கி கண்ணறைகள் | - | 3 எண்கள் |
| வாய்க்காலின் நீளம் | - | 56 மைல் 51/2 பர்லாங் |
| வாய்க்காலின் கொள்ளளவு | - | 584 கன அடி / வினாடி |
| வாய்க்காலில் உள்ள மொத்த மதகுகள் | - | 786 |
| பாசனப்பரப்பு | - | 15743 ஏக்கர் |

நியூ ஆப்செட், ஈரோடு. செல் : 97882 92121, 90922 57